மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 761 ஒத்திவைக்கப்படுகிறது.

பெரும்பள்ளம் ஓடை அருகில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம்.

*வினா எண் 762—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகர் பெரும்பள்ளம் ஓடை ஓரத்தில் வசிக்கும் குடிசை மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை வீடுகள் கட்டப்படும்?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) 400 அடுக்கு குடியிருப்புகள்.

(இ) ரூ. 52.23 இலட்சங்கள்.

வேலூரில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்

*வினா எண் 763—திரு என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு சேமநல திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வேலூரில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) மைய அரசின் தொழிலாளர் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பீடித் தொழிலாளர் நலநிதி நிறுவனம்தான் பீடித் தொழிலாளர் நலத் திட்டங்களை நிறைவேற்றும் பணியினை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வேலூருக்கருகில் சத்துவாச்சாரி என்னுமிடத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 184 வீடுகளில் 150 வீடுகளைப் பீடித் தொழிலாளர்களின் குடியிருப்புக்காக ஒதுக்கவேண்டும் என்று வேண்டியது. அவ்வாறே 150 வீடுகள் பீடித் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1982 ஏப்ரல் 5

(முற்பகல் 9.30)

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, இந்த 150 வீடுகள் ஒதுக்கப்படுவதிலே பீடித் தொழிலாளர்கள் முதலிலே ஏதாவது பணம் செலுத்த வேண்டுமா? ஆம் என்றால் எவ்வளவு பணம் செலுத்த வேண்டுமென்று அறிய விருப்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவாகளே, முதலிலே 500 ரூபாய் செலுத்த வேண்டும். மத்திய அரசு ஒருவருக்கு 1,500 ரூபாய் மானியம் தருகிறது. பிறகு 228 மந்த்லி இன்ஸ்டால்மென்டில் 19 வருஷங்களில் கட்டினால் போதும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் சுமார் 50,000 பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் இப்போது வேலூரில் மட்டுந்தான் ஒரு பகுதியில் வீடுகள் கட்டப்படுகின்றன. அந்த நகரத்தைச் சுற்றிலும் 10,000—க்கு மேல் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், இதோடு நின்றுவிடுமா அல்லது வேறு இடங்களிலும் வீடுகள் கட்டப்படுமா? பீடித் தொழிலாளர்கள் ஆரம்பத்தில் 500 ரூபாய் கட்டவேண்டுமென்று இருக்கிறது. அவர்கள் வேலையில்லாமல், போதிய வருமானம் இல்லாமல் கஷ்டப்படுவதால் முதலில் 100 அல்லது 150 ரூபாய் கட்டினால் போதும் என்ற முறையை அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இன்ஸ்டால்மென்ட் பேஸிசில் கட்டினால் போதும் என்று முடிவு செய்யப்படுகிறது. செஸ் பண்டு வசூல் செய்வது மத்திய அரசு. அவர்களே, மானியம் தருகிறார்கள். மாநில அரசுக்கு அதிலே பங்கு இல்லை. எனவே மாநில அரசு பணம் கொடுக்க வேண்டிய சாத்தியம் உள்ளதாக நான் கருதவில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, 19 ஆண்டுத் தவணையில் பணம் கட்ட எற்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் வேலை செய்கிற பீடித் தொழில் அதிபர்கள் ஷூவர்ட்டி' கொடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருப்பதாகத் தெரிகிறது. தொழில் அதிபர்கள் அதற்குத் தயாராக இல்லை. ஆகவே, அதில் சிரமம் இருக்கிறது. இந்த சிரமத்தைப் போக்க தொழிலாளர்களே, நேரடியாக பணம் செலுத்தினால் போதுமானது என்ற நிலையை உருவாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே, இதற்கான ஒரு கமிட்டி மாநில மட்டத்தில் இருக்கிறது, நான் தான் அந்தக் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். இந்த விஷயம் அந்த கமிட்டியிலே வந்தால், இதுபற்றி பரிசீலனை செய்து ஏற்ற முடிவு எடுக்கப்படும்.

1982 எப்ரல் 5]

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் இலட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்த வீடு கட்டும் திட்டம் தமிழ் நாட்டில் எந்தெந்த இடத்தில் எத்தனை வீடுகள் வீதம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது? இதுவரை எவ்வளவு வீடுகள் ஒதுக்கப் பட்டுள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் வேலூர் வரையில்தான் இது என்று கருதுகிறேன். இந்த செஸ் பண்டு திட்டம் 16-2-1977 முதல் 1-4-1979 வரையில் இருந்தது. அதற்குப் பின்னால்தான் ஜனதா ஆட்சியில் அது நிறுத்தப் பட்டது. பின்னால் நம்முடைய அரசு ஒரு தீர்மானம் நிறை வேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியது. அதனால்தான் இந்தத் திட்டம் மீண்டும் வந்தது என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசு மீண்டும் கொண்டுவந்திருக்கிறது. 1-1-1982 முதல் மீண்டும் இந்தத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. பணம் இனிமேல்தான் வரவேண்டும். பணம் குவிந்த பிறகு (அக்குமு லேட் ஆன பிறகு) இதுபற்றி மாநில அளவில் உள்ள குழு ஆலோசனை செய்யும்.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்: தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்களின் அவல நிலையை உத்தேசித்து, அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களை உத்தேசித்து, ஒவ்வொரு நகரத்திலும் இப்படிப்பட்ட வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இதிலே தொழிலாளர்கள் கொடுக்க வேண்டிய பங்குத்தொகை. அதாவது அட்வான்சாக கொடுக்கவேண்டியது 500 ரூபாய். 228 இன்ஸ்டால்மென்டில் 19 வருஷங்களில் மீதி தொகையைச் செலுத்தலாம். ஒவ்வொருவருக்கும் 1,500 ரூபாய் மானியம் என்ற வகையில் செஸ் பண்டிலிருந்து தரப்படுகிறது. செஸ் பண்டு எவ்வளவு அதிகமாக ஆகிறதோ அதைப்பொறுத்துதான் விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது. அந்தத் தொகை அதிகம் ஆகவேண்டும். அதன் பின்னால் நாம் சண்டைபோட்டு, மத்திய அரசிடமிருந்து எவ்வளவு கேட்க வேண்டுமோ அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

உப்பளங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை

*வினா எண் 764—திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—